# பத்திரிகைச் செய்தி

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்கென தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வரும் பல்வேறு திட்டங்களில் ஒன்றாக கடந்த மார்ச் 1 முதல் 'நான் முதல்வன்' திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கென இணையவழி நேரலை அமர்வுகள் ஏப்ரல் 18,19,22,23 ஆகிய தேதிகளில் நடக்கின்றன.

அறிவியல் தொடர்பான புலங்களின் மாணவர்களுக்கு, ஏப்ரல் 18 அன்று மதியம் 2 மணி முதல் 4 மணி வரை நேரலை அமர்வு நடந்தது. தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களில் இருந்து, அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,70,000 மாணவர்கள் இந்த நேரலை அமர்வில் பங்கேற்றனர். அமர்வு முடிந்தபின்னர் உயர்கல்வி வேலைவாய்ப்புக்கான 'நான் முதல்வன்' இணையதளத்தை 76,000த்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன்படுத்தினர். எந்த உயர்கல்விக்குச் செல்வதில் விருப்பம் இருக்கிறது என்றும் எந்தப் பணியில் அமர்வதில் ஆர்வம் இருக்கிறது என்றும் புரிந்துகொள்ள வகை செய்யும் மதிப்பாய்வு(Survey) மூலம் மாணவர்கள் தங்களை மதிப்பீடு செய்துகொண்டனர்.

மருத்துவம், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் மற்றும் அரசுப் பணிகள் ஆகிய துறைகளில் இருந்து மருத்துவர் திரு மதன் குமார், எம்.டி, திரு. சுரேஷ் குமார். ஜி, சி.இ.ஓ & நிறுவனர், மேக்ஆப் ஸ்டுடியோ, திரு. இளம் பகவத் ஐ.ஏ.எஸ் ஆகியோர் இன்றைய அமர்வில் பங்குகொண்டு மாணவர்களுக்கு உயர்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தியும், பல்வேறு உயர்கல்வி வாய்ப்புகள் குறித்து எடுத்துரைத்தும், அது தொடர்பான ஆலோசனைகளை வழங்கியும், நுழைவுத் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியும் அவற்றை எதிர்கொள்ளும் விதம் பற்றியும் அவர்களிடையே உரையாடினர்.

தமிழ்நாடு முழுவதும் ஒரே நேரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இந்த அமர்வுகள் இணையம் மூலம் நேரலை செய்யப்பட்டது.

கலை, வணிகம் மற்றும் பிற புலங்களின் மாணவர்களுக்கு ஏப்ரல் 19, 23 ஆகிய தேதிகளிலும், அறிவியல் தொடர்பான புலங்களில் பயிலும் மாணவர்களுக்கு இரண்டாவது அமர்வாக ஏப்ரல் 22 அன்றும் இணைய நேரலை அமர்வுகள் நடத்தப்படவிருக்கின்றன.

ஆணையர்,

பள்ளிக் கல்வி




